பாம் பிரிண்ட்
சுவடி
SUVADI
ஏடு 1 ஓலை 6

‘இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்’



கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!
நியாயமான விலை!
உறுதியளித்த நேரத்தில்!

பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்
416.284.9545
palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8

# தமிழர்களின் மூளை வளர்ச்சி பெற பஞ்ச பண்டங்கள்

சும்மா வெறுமனே ஆட்டிறைச்சி, சோற்றினால் மந்தம் அடைந்து கிடக்காமல், ஆரோக்கியமான இந்த உணவுகளையும் உண்ணுங்கள்.







ஆட்டிறைச்சியையும் இடியப்பத்தையும் விட்டால் வேறு உணவே இல்லாத தமிழ்ப் பண்பாட்டில் இதயத்திற்கும் மூளைக்கும் நலம் தரும் ஆரோக்கியமான உணவுகள் சிலவற்றை தமிழர்கள் நலன் கருதித் தருகிறோம்.

ஒலிவ் எண்ணெய் மத்தியதரைக் கடலை அண்டிய அரபு, ஆபிரிக்க, ஐரோப்பிய, நாடுகளில் வளரும் ஒலிவ மரங்களில் பெறப்படுவது. இந்த எண்ணெய் கொழுப்பாக இருந்தாலும், இது உங்கள் இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் அளவைக் குறைப்பதால், இதயத்தின் நலத்துக்கு உகந்தது. அத்துடன், சுரக்கும் இன்சுலினின் அளவை அதிகரித்து, இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. எனவே, நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஒலிவ் எண்ணெய் பயன்படுத்துவது உடலுக்கு நல்லது. சமையலுக்கு மட்டுமன்றி, உங்கள் மரக்கறி சலாட்டுக்கு மேல் ஒலிவ் எண்ணெயையும் வினாகிரியையும் ஊற்றி உண்பது நல்லது.





பருப்புகளும் கடலைகளும் உடலுக்கு மிகவும் உகந்தவை. Walnuts, Almonds, Hazelnuts போன்ற பாதாம் பருப்பு உட்பட்ட பருப்புகளில் நார்ப் பொருட்கள் அதிகம் இருப்பதால் உங்கள் வயிறு நிறைந்திருக்கும் உணர்வு ஏற்படும், உடலின் கொலஸ்ட்ரோல் அளவும் குறையும். இந்தப் பருப்புகளில் விட்டமின் E, ஒமேகா 3 எனப்படும் ஆரோக்கியமான கொழுப்பமிலம் இருப்பதால், இதய நலத்துக்கும், வயது போகும்போது மூளையின் நலத்துக்கும் உகந்தவை. இந்தப் பருப்புகளை வறுத்தோ, வறுக்காமலோ, சமைத்தோ உண்ணலாம். உப்புடன் உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

புளூபெரிப் பழங்களில் விட்டமின் சி, நார்ப் பொருட்கள் என்பவற்றுடன் antioxidants எனப்படும் உடலுக்கு நலம் தரும் பொருட்கள் உள்ளன. இந்த anti oxidants புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளைத் தடுக்கக் கூடியன. சிறுநீர்வழியில் ஏற்படும் தொற்று, முரசு கரைதல் போன்றவற்றைத் தடுக்கக் கூடியது. இவற்றைத் தனியாகவோ, தயிரில் கலந்தோ, ஜூஸ்களுடன் கலந்தோ பயன்படுத்துங்கள்.

மீன்களில் salmon, lake trout, herring, sardines and tuna போன்ற மீன்கள் ஒமேகா 3 கொழுப்பமிலத்தைக் கொண்டிருந்து, கொலஸ்ட்ரோலைக் குறைப்பதால் உங்கள் இதயத்திற்கும் மூளைக்கும் உகந்தவையாகும். வாரம் இரு தடவை இவற்றை உண்பது இரத்த அழுத்தத்தைக் குறைத்து, இருதய நோய் வருவதைத் தடுக்கும். உடற்கலங்கள் வீங்கி, இரத்தக் குழாய்கள் பழுதடைவதையும் இவை தடுக்கும். கறியாகவோ, டின் மீன் வகையறாக்களை சம்பல் செய்து பாணுடனோ சாப்பிடுங்கள்.

கோவா வகையைச் சேர்ந்த கேல் இலையில் நிறைய உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இதில் கல்சியம், விட்டமின் சி, ஏ, கே, செம்பு, பொட்டாசியம், இரும்பு, பொஸ்பரஸ், மங்கனீஸ் என எக்கச்சக்கமான சத்துக்கள் உள்ளன. கண்பார்வை, எலும்புகள், தோல், கண் போன்றவற்றின் நலனுக்கு மட்டுமன்றி, இவற்றில் புற்றுநோயை எதிர்க்கும் சத்துக்களும், நார்ப்பொருட்களும் உள்ளன. அத்துடன் இதில் உள்ள கலோரிகள் மிகவும் குறைவானவை. பச்சையாகவோ, வறுத்தோ, நீராவியில் அவித்தோ இவற்றை உண்ணலாம். ஒலிவ் எண்ணெய் தடவி, அடுப்பில் 350 பாகையில் வாட்டி, அப்பளம் போலவும் உண்ணலாம்.

சும்மா வெறுமனே ஆட்டிறைச்சி, சோற்றினால் மந்தம் அடைந்து கிடக்காமல், ஆரோக்கியமான இந்த உணவுகளையும் உண்ணுங்கள். மூளை வளர்ச்சிக்கும் உகந்தவை என்பதால், தமிழர்கள் இவற்றை உண்டால் தமிழினம் வளர்ச்சி பெற வழி பிறக்கலாம்.

‘ஏன் எங்களுக்கு என்ன குறைச்சல்?’ என்று வீரம் காட்டப் போய், வம்பில் மாட்டி வாங்கிக் கட்டிக் கொள்ளாமல், விவேகம் பெறவாவது உதவுமே!

பிரஜா உரிமை
வதிவிட உரிமை
பத்திரங்கள் நிரப்புதல்
ஆவண மொழிபெயர்ப்பு

Super Visa
416.269.5883

Citizenship
PR Forms
Sponsorship Forms
Translation Services

# தமிழில் குறுஞ்செய்தி அனுப்புவது எப்படி?

உங்கள் செல்பேசியில் தமிழில் செய்திகளும் மின்னோலைகளும் வரக் கண்டு மெய் சிலிர்த்து, எப்படி தமிழில் குறுஞ் செய்தியும் ஓலையும் அனுப்புவது என்று முடியைப் பிய்த்திருப்பீர்கள். தெரிந்தவர்களிடம் கேட்டிருந்தாலும், பெரும் பந்தா காட்டியிருப்பார்கள்.

நீங்கள் 'காசை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாத' ஐபோன் பிரியராயின் உங்கள் IOS 7 இல் தமிழில் நேரடியாகவே தட்டச்சும் வசதி உண்டு.

ஐபோனில் Settings என்பதில் கிளிக்கி, General என்பதைத் தெரிவு செய்யுங்கள். அதில் Keyboard என்பதைத் தெரிந்து Keyboards இல் Add New KeyBoard என்பதைத் தெரிந்த பின்னால் அதில் பயன்படுத்தக் கூடிய மொழிகளின் பட்டியலே உண்டு. அதில் தமிழைத் தெரிவு செய்து Select பண்ணுங்கள்.

அங்கே Tamill 99 விசைப்பலகையும் Anjal விசைப்பலகையும் உண்டு. இதில் Tamil99 விசைப்பலகையில் தமிழில் தட்டச்சிட, உயிர்மெய் எழுத்துக்களை எழுத, முதலில் மெய்யெழுத்தையும் பின்னால் உயிர் எழுத்தையும் அழுத்துங்கள். கு எழுதுவதாயின் க், உ என்று அழுத்த கு வரும்.

Anjal முறையில் amma என்று அழுத்தினால் அம்மா வருவாள்.

ஐபோனில் உள்ள மற்ற app களில் தமிழில் பயன்படுத்த, விசைப்பலகைப் படத்தில் உலகப்படத்தை அழுத்தி தமிழை தெரிவு செய்யலாம்.

நம்மைப் போல 'காசு இல்லாமல் என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கும்' அன்ட்ரோய்ட் பாவனையாளர் எனின் Google Play Store App ஐ அழுத்தி அதில் Multiling Keyboard ஐத் தேடி தரவிறக்கம் (Install) செய்யுங்கள். பின்னர் அந்த app ஐ கிளிக்க, அதை செயற்படுத்தவும் (enable) செய்யவும், தமிழை தெரிவு செய்யவும் தெரிவுகள் உள்ளன. தமிழ் மட்டுமன்றி, பல்வேறு மொழிகளில் நீங்கள் வல்லுனர்களாயின் (மன்னிக்கவும், கெட்ட வார்த்தை ஒரு மொழியல்ல!) அவற்றையெல்லாம் பயன்படுத்தலாம். பின்னர் விசைப்பலகை வரும் இடங்களில் space தட்டும் இடத்தில் ஆங்கிலம் என்று இருப்பதில் அழுத்தி தமிழை தெரிவு செய்து தட்டச்சலாம். கு அடிப்பதாயின் முதலில் க, பின் ு குறியை தட்ட வேண்டும். கோ அடிப்பதாயின் க, பின்னர் ே ா தட்ட வேண்டும்.

எப்படி தமிழை செல்பேசியில் install செய்வது என்பது இன்னமும் புரியாவிட்டால், வீட்டில் உள்ள பால் குடி மறந்த பிள்ளைகளைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் ஒரிரு நிமிடங்களில் செய்து தருவார்கள்.

தமிழில் குறுஞ் செய்தி அனுப்பக் கற்றுக் கொள்வது சரி. அனுப்பிய பணம் கிடைத்ததா என்று அம்மாவுக்கு அனுப்ப வேண்டிய செய்தியை மனைவிக்கு அனுப்பி ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

# பயன் பெறுங்கள்! நூலகங்களில் இலவச வகுப்புகள்

TORONTO PUBLIC LIBRARY

றொறன்ரோ நூலக வலைப் பின்னலில் எப்படி நூல்களைப் பெறுவது என்பது பற்றி முன்னைய சுவடிகளில் அறிந்திருப்பீர்கள். இந்த நூலகங்கள் வெறுமனே நூல் கடன் வாங்கும் நிலையங்கள் அல்ல. குழந்தைகள் முதல் முதியோர் வரைக்கும் பயன்தரக் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரே இடத்தில் நடைபெறுவதில்லை, வெவ்வேறு கிளைகளில் நடைபெறுகின்றன.

இங்கே புதிதாய் தொழில் தொடங்குவது, வேலை தேடும்போது கையளிக்கும் resume பத்திரங்களை எழுதுவது எப்படி என்பது முதல் யோகாசனம் வரைக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் இலவசமாக நடைபெறுகின்றன. குழந்தைகளுக்கான வீட்டுப் பாட உதவிகள், இணையத் தளம் வடிவமைப்பு, கணனியில் படங்களை மாற்றம் செய்வது பற்றிய தொழில்நுட்ப, விஞ்ஞான விடயங்கள், வர்த்தகர்கள் கணக்கு வழக்குகளைப் பதிவு செய்வது, எதிர்கொள்ளக் கூடிய சட்டப் பிரச்சனைகள் போன்ற வியாபார விடயங்கள், உயில் எழுதுதல் போன்ற தனியார் நிதிநிர்வாக விடயங்கள், வேலை தேடுபவர்களுக்கான உதவிகள், புதுக் கனடியர்களுக்கான ஆங்கில வகுப்புகள், ஆங்கில உரையாடல் திறனை வளர்க்கும் வகுப்புகள், யோகாசனம், தியானம் போன்ற உடலையும் மனதையும் வளர்க்கும் பயிற்சிகள் என நூற்றுக்கணக்கான பயிற்சி வகுப்புகள் நூலகங்கள் எங்கும் நடைபெறுகின்றன.

www.torontopubliclibrary.ca/programs-and-classes/ என்ற இணையத் தளத்தில் முழு விபரங்களையும் நீங்கள் பெறலாம்.

இந்த வகுப்புகளில் பல சில மணி நேரங்கள் மட்டுமே நீடிக்கும். தினசரியோ, வாராந்தமோ தொடர்ந்து போக வேண்டிய கட்டாயமும் இல்லை.

சில வகுப்புகளுக்கு நீங்கள் முன்னரே பதிவு செய்ய வேண்டும். பலவற்றுக்கு நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் போய் பங்குபற்றலாம்.

உங்களுக்கு அருகில் உள்ள நூலகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி, அங்கு சென்று அச்சிட்ட பிரசுரங்களைப் பெற்று தகவல் பெறுங்கள்.

உங்கள் நகர வரிப்பணத்தில் செயற்படும் இந்த நூலகங்களால் இலவசமாக வழங்கப்படும் சேவைகளைப் பயன்படுத்தி, உங்கள் வரிக்கான முழுமையான பயனைப் பெறுங்கள். அவ்வாறில்லாமல், கனடா வந்த நாள் முதல் இந்த நாள் வரை சமூக உதவிப் பணத்தில் தான் வாழ்க்கை என்றாலும், சதா விஜய் டிவியைப் பார்த்து மூளை மழுங்குவதை விட, நாலு விடயத்தை அறிந்து கொண்டு ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொண்டால், வீடு வாங்கி நகர வரி கட்டும் அளவுக்கு உயர்வதற்கு வாய்ப்பு உண்டே.

24 மணி நேரமும் வானலைகள், பத்திரிகைகள் மூலமாய் திணிக்கப்படும் புரட்டுகளையும் புரளிகளையும் விழுங்குவதை விட, நாங்களாகவே அறிவைத் தேடிக் கொண்டால் சில நேரம் தமிழினம் முன்னேறுவதற்கு சந்தர்ப்பமும் உண்டு.


ஒரு வீட்டை மாளிகையாக்குவது
தளபாடங்களே!
உங்கள் வீட்டை
மலிவு விலையில் மாளிகையாக்க...
Sunflowers furniture
3024 Kennedy Rd
416.609.8556

# புதுமனைப் புகுவிழாவுக்கு முன்னால்...

வீடு வாங்கப் புறப்பட்டு கடைசியில் மாமி, மாமா, மைத்துனர் விருப்புக்கேற்பவும், நியூமரோலஜிபடி 13ம் இலக்கம் வராதபடிக்கும், (அப்படித்தான் 13 இலக்கம் வந்தாலும் அதற்கு அருகில் A போட்டு விடும் நியூமரோலஜி சாத்திரிமார்களும் உண்டு) வீடு வாங்க அச்சாரமும் கொடுத்து ஒருவாறாக வீடு வாங்கும் படலம் முடிவுக்கு வந்திருக்கும். வீடு வாங்குவது என்பது கடையில் பொருட்கள் வாங்குவது போலல்ல, வாங்கியவுடன் பயன்படுத்த. உங்கள் ஒப்பந்தத்தின் முடிவு நாள் (Closing Date) ஒரு முக்கியமான நாள். அந்த நாளைக் கவனமாகத் திட்டமிடுங்கள்.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த நாட்களில் முடிவுநாளை வைக்க முயற்சியுங்கள். வழமையில் வெள்ளிக்கிழமைகளில் தான் பெரும்பாலான வீடுகளின் ஒப்பந்தம் முடிக்கும் நாள் வருவதால், முகவர் அலுவலகங்கள் பிஸியாக இருக்கும். இதனால், பல ஒப்பந்தங்கள் நாளின் முடிவில் தான் முடிக்க வேண்டி வரலாம். எதிர்பாராத விடயங்களால் ஒப்பந்தம் இழுபட நேரிட்டால், திங்கள் வரைக்கும், நீண்ட வார இறுதியாயின், செவ்வாய் வரைக்கும் திறப்பு உங்கள் கைக்கு வர முடியாமல் போக நேரிடலாம். கடைசி நேர மன அழுத்தத்தையும், சிக்கல்களையும் தவிர்க்க மற்ற நாட்களைத் தெரிவு செய்யுங்கள். புதன்கிழமை ஒப்பந்தம் முடிக்க நல்லதொரு நாள். ஏதாவது சிக்கல் வந்தாலும், ஒருநாள் நீடிப்பு செய்யலாம். (பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பதைக் கேட்க சாத்திரியாருக்கு நீங்கள் பணம் கொடுக்கத் தேவையில்லை. அதற்காக புதன்கொடுதீவு என்றெல்லாம் தொடங்காதீர்கள்)

ஒப்பந்தம் முடிவு நாளில் மாலை மூன்று மணிக்கு உங்களுக்கு வீடு கையில் கிடைக்க வேண்டும். வழமையில் ஒப்பந்தங்கள் 2 அல்லது 3 மணிக்கே கைச்சாத்தாகும். ஒப்பந்தம் கைச்சாத்தாகியவுடன், வீட்டுக்காரர் வீட்டை உங்களிடம் கையளிக்க வேண்டும். அப்படித் தான் முடியாமல் அவதிப்பட்டாலும், மனிதத் தன்மையை இழக்காதீர்கள். இது என்ரை வீடு, நான் சாமான் இறக்க வேணும் என்று பழைய வீட்டுக்காரரின் பொருட்களை வீதியில் எறிதல் வேண்டாம். முடிந்தவரைக்கும் அவர்கள் வீட்டை விட்டு வெளியேற ஒத்துழையுங்கள்.

சட்டத்தரணியிடம் திறப்பை வாங்கி வீட்டைத் திறக்க, வீட்டுக்காரி எங்களைத் திருட வந்ததாய் திடுக்கிட்டு, கடைசியில் சட்டத்தரணிகளின் தலையீட்டால் நிலைமை தெளிவாகி, கடைசியில் வீட்டுக்காரி வீட்டுக்குள்ளே கராஜ் சேல் வைத்ததும், பழைய கட்டில் வாங்க வந்த பெண் 'நீயெல்லாம் இந்த வயதில வீடு வாங்கியிட்டாய், என்ரை புருஷனுக்கு வேலை ஏதும் எடுத்துத் தரேலுமோ?' என்று (பொறாமை கலக்க) விசாரித்த அனுபவமும் நமக்குண்டு.

நீங்கள் குடியிருந்த வீட்டை விற்று, மாமிக்கு பெரிய பெட்ரூம் வேண்டுமென்று மார்க்கத்தில் மில்லியன் டொலர் வீடு வாங்குவீர்களாயிருந்தால், நீங்கள் விற்றுச் செல்லும் வீட்டை துப்புரவாக்கி விட்டே செல்லுங்கள். இனிமேல் அது அவவின்ரை பிரச்சனை என்று எந்தக் குப்பையையும் விட்டுச் செல்லாதீர்கள். நீங்கள் வீடு வாங்கும்போது வாங்கும் வீடு துப்புரவான நிலையில் இருக்கிறதா என்பதை இரண்டு நாட்களுக்கு முன்னர் சென்று பார்வையிடலாம்.

மேற்சொன்னவாறு இருந்த வீட்டை விற்று மார்க்கத்து மில்லியன் டொலர் வீடு வாங்கினால், இரண்டு நாட்களுக்கு முன்னர் வாங்கும் வீட்டின் ஒப்பந்தத்தை முடியுங்கள். அதற்கு நீங்கள் Bridge Financing பெற வேண்டும். உங்கள் வீடு விற்று உங்களுக்கு கையில் பணம் வந்தால் தான் வாங்கும் வீட்டுக்கு கொடுக்க முடியும். வைப்புத் தொகை கொடுக்கவும் பணம் இல்லாமல் போகலாம். அதற்காக விற்பதற்கும் வாங்குவதற்குமான இடைக்காலத்தில் அந்தத் தொகையைக் கடனாகப் பெற்று, வீடு விற்றதும் அந்தக் கடனைச் செலுத்துதற்கான பாலமே Bridge financing. இரண்டும் ஒரே நேரத்தில் முடிப்பதாயின், சிக்கல்கள் எழலாம். மன அழுத்தமின்றி ஒப்பந்தம் முடிக்கவும், உங்கள் வீடு விற்பதற்கிடையில் இரண்டு நாட்களுக்குள் உங்கள் பொருட்களை புதிய வீட்டுக்கு கொண்டு போகவும் வசதியேற்படும். அத்துடன், உங்கள் வீட்டு விற்பனையின் ஒப்பந்தம் நீடிக்க வேண்டி வந்தாலும் சிக்கல்கள் எழாது.

தவிர்க்க முடியாமல் அவசரமாய் குடியேற வேண்டுமாயினும் ஒப்பந்தம் முடிப்பு நாளின் பிற்பகுதியில் அல்லது மறுநாளே குடி புகத் திட்டமிடுங்கள். சில நேரங்களில் கடைசி நேரச் சிக்கல்களால் பொருட்களை நகர்த்துபவர்களுக்கு மேலதிகமாகச் செலவிட வேண்டி ஏற்படலாம்.

சில நேரம் குடி புக அவசரமில்லாவிட்டாலும், ஒப்பந்தம் முடிப்பு நாளில் வீட்டைச் சென்று பார்வையிடுங்கள். எதுவும் சேதப்படுத்தப்பட்டதா, பொருட்கள் யாவும் வேலை செய்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துங்கள். ஒப்பந்தம் முடிப்பு நாளில் எல்லாம் வேலை செய்யும், நல்ல நிலையில் எல்லாம் இருக்கிறது என்று விற்பவர் உறுதிப்படுத்துவார். அதன் பின்னால் நடப்பது பற்றி அவருக்கு பொறுப்பில்லை. எனவே ஏதாவது பாதிப்பு இருந்தால் உடனடியாக முகவரிடமும் சட்டத்தரணியிடமும் தொடர்பு கொள்ளுங்கள்.

பழுதான உடை கழுவும் இயந்திரத்தை உடை உலர்த்தும் இயந்திரம் மாதிரி காட்டியதால் ஏமாந்த அனுபவம் நமக்குண்டு. எனவே குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றை பரிசோதித்துக் கொள்ளுங்கள். சில நேரம் வீடு பார்க்கும்போது இருந்த பொருட்களை மாற்றி பழையவற்றையும் வைக்கக் கூடும்.

சரி, வீடு வாங்கியாயிற்று. யாராவது டிஜே தமிழனைக் கூப்பிட்டு பாட்டுப் போட்டு, அற் ஹோம் நடத்துவதற்கு முன்னால், என்ன செய்கிறீர்களோ, ஏது செய்கிறீர்களோ, வீட்டில் நிம்மதியாக இருக்க வேண்டுமாயின், எதற்கும் உடனடியாக விஜய் டிவி இணைப்பைப் பெறுங்கள். இல்லாவிட்டால், மார்க்கத்து மில்லியன் டொலர் வீட்டு மாப்பிள்ளையை மாமியார் அற்ப புழுவைப் போல பார்க்க நேரிடும்.


வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!

Leo Swampillai
Sales Representative

Homelife/Future
Realty Inc.Brokerage*
Bus:905.201.9977

416.347.8732
leo33@rogers.com

# பொறுப்புள்ள பார்த்தசாரதியாகி விபத்துக்களைத் தவிருங்கள்

## பாகம் 1

வீதிகளில் வாகனங்கள் மலிந்து, நெரிசலில் அகப்பட்டு அடிக்கடி பொறுமை இழந்திருப்பீர்கள். இதற்குள் விபத்துகளில் மாட்டிக் கொள்ளாமல் வீடு சேர்வது என்பது இன்னொரு பெரும் சவால். வருடாந்தம் கனடாவில் நான்கரை லட்சம் வாகன விபத்துக்கள் இடம் பெறுகின்றன. விபத்துக்களைத் தவிர்க்க இதோ சில ஆலோசனைகள்...

உங்கள் பயணத்தைத் திட்டமிடுங்கள். போக வேண்டிய இடத்திற்கு செல்லும் பாதுகாப்பான வீதிகளைத் தெரிவு செய்யுங்கள். எங்கே, எப்போது திரும்ப வேண்டும் போன்ற விடயங்களை முன்னரே திட்டமிடுங்கள். 'இதுக்காலை விட்டு, அதுக்காலை போகும்' யுக்திகள் பெரும்பாலும் ஆபத்தில் முடியலாம். புதிய இடங்களுக்குச் செல்வதாயின், Google maps அல்லது Mapquest.com அல்லது routes.tomtom.com அல்லது ca.maps.yahoo.ca இணையத் தளங்களில் பயண ஆரம்ப, முடிவு இடங்களைக் கொடுக்க படமே கீறித் தரும். உங்களிடம் GPS எனப்படும் உபகோள் உதவி கருவி இருந்தாலும் இந்தப் படங்கள் ஆரம்பத்திலேயே பயணத்தைத் திட்டமிட உதவியாக இருக்கும்.

அருகில் உட்கார வைப்பவர்கள் பற்றி கவனமாய் இருங்கள். 'உங்க உந்த பியர்க் கடைக்குள்ள ஒருக்கா விடு', 'உதிலை சாறிக்கடை மலிவு விற்பனையாம், திருப்புங்கோ' என்பவர்களை பக்கத்தில் அமர்த்தாதீர்கள். வேறு சிந்தனையில் நீங்கள் திருப்பப் போக, பின்னால் வருபவர்கள் வந்து மோத... எதற்கு வீண் வம்பு? ஏறுபவர்களிடம் முதலே அவர்கள் போக வேண்டிய இடங்களைக் கேட்பது விபத்தைத் தவிர்ப்பது மட்டுமல்ல, சென்ற இடத்திற்கு அருகில் உள்ள இடத்திற்கு மீண்டும் போக வேண்டிய எரிபொருள் செலவையும் மீதமாக்கும்.

'உங்க உந்த பியர்க் கடைக்குள்ள ஒருக்கா விடு', உதிலை சாறிக்கடை மலிவு விற்பனையாம், திருப்புங்கோ' என்பவர்களை பக்கத்தில் அமர்த்தாதீர்கள்

வாகனத்தைச் செலுத்த ஆரம்பிக்க முன்னால் ஒரு தடவை காரைச் சுற்றி வாருங்கள். கோயிலைச் சுற்றியது போல! காருக்கு கீழ் படுத்திருக்கும் பூனை, வீட்டிலுள்ள மற்றவர்கள் கொண்டு போய் ஏற்படுத்திய சேதம், கவனக் குறைவாய் வீட்டுக்காரர் கைவிட்ட பொருட்கள் என பல கண்டுபிடிப்புகள் கிடைக்கும்.

வேகமாய் மிதித்து, கடுமையாய் பிரேக் அடிக்கும் பழக்கத்தைக் குறைத்து, மெதுவாக, சீராக செலுத்துங்கள். பச்சை விழுந்ததும் சீறிப் பாய்ந்து, மஞ்சளைக் கடக்க முயற்சித்து தோற்று, சிவப்பில் பிரேக் அடிக்கும்போது, நீங்கள் கடக்கப் போவதாக எண்ணி, உங்களைப் பின் தொடர்ந்தவர் பின்புறத்தை நொருக்கக் கூடும். உங்களுக்கு நேரே முன்னால் இருக்கும் வாகனத்தை மட்டுமல்ல, நீண்ட தூரத்திற்கு பார்க்கக் கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்துங்கள். இது கவனமாக வாகனம் செலுத்த உதவுவது மட்டுமன்றி, ஏதாவது விபத்து நடந்தால் அதைத் தவிர்க்கவும் உதவும். ஆபத்து வந்த பின் காப்பதை விட, வருமுன் காப்பது நல்லது.

உங்கள் பார்வையை மறைக்கக் கூடிய பெரிய வாகனங்களின் பின்னால் ஒட்டிக் கொண்டு தொடர்வதை நிறுத்துங்கள். அவர்கள் திடீரென்று பிரேக் அடித்தால், நீங்கள் அவர்களின் பின்புறத்தை நொருக்கக் கூடும்.

முன்னால் உள்ள வாகனத்திற்கும் உங்கள் வாகனத்திற்கும் இடையிலான தூரம் நகரத் தெருக்களில் இரண்டு செக்கன்கள், பெருந்தெருக்களில் நான்கு செக்கன்கள் ஆகும். அதற்காக மணிக்கூட்டில் செக்கன்களைப் பார்த்தபடி கார் ஓட்டாதீர்கள். முன் வாகனம் கடந்து சென்ற இடத்தை நீங்கள் அடைய, ஆயிரத்தில் ஒன்று, ஆயிரத்தில் இரண்டு, ஆயிரத்தில் மூன்று என்று எண்ணுவது செக்கன்களை கணக்கிட உதவும். அதைவிடக் குறைந்த நேரமாயின், முன் வாகனம் ஆபத்தில் மாட்டிக் கொண்டால், உங்கள் வாகனத்தை நிறுத்த உங்களுக்கு நேரம் போதாமல் இருக்கும்.

பாகம் 2 அடுத்த இதழில்



## 'பின்' குறிப்பு

சுவடி பாதுகாப்புக் கவசத்துடன்!

வித்தியாசமாய் இருக்கும்.

விளம்பரப் பிரசுரங்கள் வீணாகாமல், வாடிக்கையாளரைச் சேர, சுவடிக்குள் வைத்து வினியோகிப்பது விளம்பரதாரர்களைக் கவர்ந்து விட்டது.

அறிமுக அட்டைகள், விளம்பர அட்டைகளை உள்ளே வைத்து வினியோகிப்பதற்கு வசதியாக உறைக்குள் வைத்து வினியோகிக்கிறோம். மற்ற வர்த்தகர்களும் எங்கள் சேவைகளைப் பயன்படுத்துவார்கள் என நம்புகிறோம்.

விளம்பரதாரர்களை ஆதரியுங்கள், அச்சுத் தேவைகளுக்கு எங்களை அணுகுங்கள் என்று திருப்பித் திருப்பிச் சொல்லத் தேவையில்லாத புத்திசாலித் தமிழர்கள் நீங்கள்!

வழமை போல, 'உவரை விட நான் திறமாய் செய்வன்' என்று புறப்பட்டு, பாதுகாப்பு உறை என்பதைத் தவறாக விளங்கி, விபரீதமான எதற்குள்ளாவது வைத்து பிரசுரங்களை வினியோகிக்கும் புத்திசாதுர்யம் யாராவது தமிழர்களுக்கு ஏற்படக் கூடாது என்பதற்காக...

இறைவனைப் பிரார்த்திப்போம்!

**பாதுகாப்பு உறையுடன் சுவடி!**

Palm Print Inc
Design & Print

படம் பதித்த
• கோப்பைகள்
• ரீசேட்டுகள்

• Copy • Print
• Sign

• Logo Design • Ad Design

Palm Print

416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com

This newsletter is edited, printed and published by Palm Print Inc.

இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது